முருகப்பெருமான் துணை

**மகான் கோட்புலி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.10.2023**, சனிக்கிழமை

1. பரமானந்த ஞான வாழ்வுதனை
பாமரரும் அடைய வேண்டி
சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தரிவை திங்கள்
வரங்களென இருபானேழ்திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 27 ம் நாள், 14.10.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை கோட்புலி நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற ஞானவான்களாக
வருங்காலம் மக்கள் படைகள் தானும்
4. தானுமே நிலைகள் உயர
தவசி அரங்கமகா ஞானியும்
ஞான வழிகளை காட்டிவர
நம்பிக்கை வைத்து மக்கள்
5. மக்களெல்லாம் அரங்கன் குடிலில்
மனமுவந்து சரணாகதி கொண்டு
தேக்கமின்றி தீட்சை பலம்
தேசிகன் கரங்கள்பட அடைந்து
6. அடைந்துமே ஞானிகள் மேலான
அளவிலா சக்திமிகு பூசையும்
இடர் வெல்லும் அன்னதானமும்
இவ்வுலகோர் செய்து கொண்டு

7. கொண்டுமே பசிபிணித் துன்பம்
குவலயம் விட்டு அகல
தொண்டுதனை செய்துவர
தேசிகனார் ஆசி அனுகூலம் பெற்று
8. பெற்றுமே கலிக் கட்டங்கள்
பிரச்சினைகள் அனைத்துமே
உற்றதொரு அகன்று மேவிட
உயர்பாதுகாப்பு கண்டு
9. கண்டுமே தன்னிலை தேறி
கந்தப் பெருமான் காட்சி
தொண்டின் வழியே அடைந்து
தெரிவிப்பேன் ஞானிகளாவர்
10. ஆவரே உலகை மாற்றும்
அதிசய மனிதர்கள் சித்தர்களாக
அவனியில் சக்தி கூடி
அரங்கன் அவதாரப் பெருமை
11. பெருமை உலகே ஏற்கும்படி
பெருஞ்சேவை ஆற்றி மண்ணில்
தரும ஞான ஆட்சிப் படைப்பர்
தலைவன் ஒருவன் முருகனே என உணர்வர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–